பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
07 10 2025 TUESDAY 6.30 PM

## மாநிலச் செய்திகள்

### தலைப்புச் செய்திகள்

- இந்தியாவை அனைத்துத்துறைகளிலும் தற்சார்புடைய நாடாக உயர்த்துவதற்கு மத்திய அரசு விரிவான சீர்திருத்த நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- மத்திய அரசின் திட்டப்பயன்கள் மக்களுக்கு வங்கிக் கணக்குகளில் செலுத்தப்படுவதால் 4 லட்சத்து 31 ஆயிரம் கோடி ரூபாய் சேமிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.
- வடகிழக்கு பருவமழை காலத்தில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாநில அமைச்சர்கள் திரு கே என் நேரு, திரு மா. சுப்பிரமணியன் தலைமையில் இன்று சென்னையில் நடைபெற்றது.
- நேரடி கொள்முதல் நிலையங்களில் காலதாமதமின்றி நெல் கொள்முதல் செய்ய மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.
- உலக ஜூனியர் கலப்புக் குழு பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று இலங்கையை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ----

<<<<<<<>>>>>>

உலக பொருளாதாரத்தில் இந்தியா ஒளிரும் மையமாக திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அரசு பதவியில் தமது 25வதுஆண்டு தொடக்கத்தை ஒட்டி, விடுத்துள்ள சமூகவலைதளப் பதிவுகளில் இதனை தெரிவித்துள்ள பிரதமர், மருத்துவம் மற்றும் சமூக பாதுகாப்பு திட்டங்கள், மக்கள் நலனுக்காக அதிக அளவில் செயல்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்தியாவை அனைத்து துறைகளிலும் தற்சார்புடைய ஒரு நாடாக உயர்த்துவதற்கு மத்திய அரசு விரிவான பல சீர்திருத்தங்களை கொண்டு வந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் அரசியல் சாசனம் நமக்கு வழிகாட்டியாக திகழ்வதாக கூறிய அவர், இலட்சிய பாரதத்தை உருவாக்க வரும் ஆண்டுகளில் அர்ப்பணிப்போடு, கடுமையாக உழைக்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டை நாம் அனைவரும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

நாட்டிற்காக சேவை செய்வதை தமக்கு கிடைத்த மாபெரும் கௌரவமாக கருதுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

2014 ஆம் ஆண்டு தாம் பிரதமராக பொறுப்பேற்றதிலிருந்து, அரசின் மீது நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை எடுத்ததாகவும் பிரதமர் தெரிவித்தார்.

முந்தைய, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் முறையற்ற நிர்வாகத்தாலும், தவறான கொள்கைகளாலும், ஊழல் முறைகேடுகளாலும் பாதிக்கப்பட்டிருந்த இந்தியாவை மீட்டெடுக்கும் பொறுப்பு தமக்கு இருந்ததாகவும் அவர் கூறினார்.

2014ஆம் ஆண்டிற்குப் பிறகு தமது தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி பெரும்பான்மை ஆதரவுடன் வெற்றிபெற்று மக்களுக்கான சேவையை தொடர்ந்து ஆற்றி வருவதாகவும் பிரதமர் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி தமது 24 ஆண்டுகால அரசு பதவியை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், குஜராத் முதலமைச்சராக நீண்டகாலம் கடமையாற்றியவர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளதாக கூறியுள்ளார்.

அவரது தலைமையிலான அரசு, வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றிகளை குவித்துள்ளதாக குறிப்பிட்ட அவர், சர்வதேச அளவில் நாட்டின் கௌரவத்தை உயர்த்துவதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி முக்கியப் பங்காற்றியவர் என்றும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சுதந்திரத்திற்குப் பின் பிறந்து, பிரதமராக பதவியேற்ற பெருமை திரு நரேந்திர மோடிக்கு மட்டுமே உண்டு என்றும் டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<<>>>>>>

மத்திய அரசின் திட்டப் பயன்கள் மக்களுக்கு நேரடியாக வங்கிக் கணக்கு மூலம் செலுத்தப்படுவதால், 4 லட்சத்து 31 ஆயிரம் கோடி ரூபாய் சேமிக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மும்பையில் இன்று உலக நிதி தொழில்நுட்ப விழாவில் வெளிநாட்டு கரன்ஸி பரிவர்த்தனை கட்டமைப்பை தொடங்கி வைத்துப் பேசிய அவர், அனைத்து பரிவர்த்தனைகளையும் இந்த கட்டமைப்பு மூலம் நிகழ்கால அடிப்படையில் மேற்கொள்வதற்கு வகை செய்யப்பட்டுள்ளதாக கூறினார்..

பொதுவாக, வெளிநாட்டு கரன்ஸி பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கு 36 முதல் 54 மணி நேரம் வரை ஆவதை கருத்தில் கொண்டு இழப்புகளை தடுக்கும் நோக்கில் இந்த நிகழ்கால

வெளிநாட்டு கரன்ஸி பரிவர்த்தனை கட்டமைப்பு கொண்டுவரப்பட்டுள்ளதாக திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>

பாதுகாப்பு சாதனங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மூலம், நாட்டிற்கு அதிக வருவாய் கிடைக்கும் என்று பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைமை இயக்குநர் டாக்டர் D.K. தாஸ் தெரிவித்துள்ளார்.

சென்னையில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் சார்பில் நடைபெறும் மூன்றுநாள் விண்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில் கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் பேசிய அவர், பத்து ட்ரில்லியன் டாலர் பொருளாதாரத்தை நோக்கி இந்தியா வேகமாக வளர்ச்சியடைந்து வருவதாக கூறினார்

உள்நாட்டு தொழில்நுட்பத்தை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

தொழில் நிறுவனங்கள், பாதுகாப்புத் துறையுடன் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட சாதனங்கள் பயன்படுத்தப்பட்டதாகவும், அவை வெற்றிக்கு வழிவகுத்ததாகவும் அவர் எடுத்துரைத்தார்.

முப்படைகளுக்கும் தேவைப்படும் சாதனங்களை தயாரிப்பதுடன், அவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலம், உலகிலேயே அதிக வளர்ச்சி பெற்ற நாடாக இந்தியா திகழும் என்றும் திரு. டி.கே. தாஸ் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>

வடகிழக்கு பருவமழை காலத்தில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து சுகாதாரம் மற்றும் நகராட்சி நிர்வாகத்துறை சார்பில் அமைச்சர்கள் தலைமையில் ஆய்வு கூட்டம் இன்று சென்னையில் நடைபெற்றது.

கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, வடகிழக்கு பருவமழை காலத்தில் மக்களுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படாத வகையில் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

பாதுகாப்பான குடிநீர் தடையின்றி கிடைப்பதற்கான நடவடிக்கை குறித்தும், நகராட்சி நிர்வாகத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய இதரப் பணிகள் குறித்தும் விரிவாக ஆய்வு செய்யப்பட்டதாகவும் திரு. கே.என். நேரு தெரிவித்தார்.

மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் பேசுகையில், பருவமழையை ஒட்டி, மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருவதாகவும், காய்ச்சல், வயிற்றுப்போக்கு உள்ளிட்ட பாதிப்புகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

மாநிலத்தில் டெங்கு பாதிப்பு கட்டுப்பாட்டில் உள்ளதாக கூறிய அமைச்சர், கொசுக்கள் உற்பத்தியை தடுக்க உள்ளாட்சி அமைப்புகள் மூலம், மருந்து தெளித்தல், கொசு மருந்து அடித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

டெல்டா மாவட்டங்களில் அறுவடை செய்யப்பட்ட குருவை நெல்லை, உரிய காலத்தில் நேரடி கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படாததால், விவசாயிகள் இன்னலுக்கு உள்ளாகியிருப்பதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குறை கூறியுள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், போர்க்கால அடிப்படையில் நேரடி நெல் கொள்முதல் நிலைங்களில், விவசாயிகளிடமிருந்து உடனுக்குடன் கொள்முதல் செய்து. அதற்குரிய பணத்தை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்த மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுவலியுறுத்தியுள்ளார்.

<<<<<<<>>>>>>

பிஜேபி துணைத்தலைவரும் அக்கட்சியின் தமிழக தேர்தல் பொறுப்பாளருமான திரு. பைஜெயந்த் பாண்டா, சென்னையில் இன்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமியை சந்தித்து பேசினார்.

அப்போது, தமிழக சட்டப்பேரவை தேர்தலை தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சிகள் ஒருங்கிணைந்து எதிர்கொள்வது குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தெரிகிறது.

புதிய நீதிக் கட்சி நிறுவனர் திரு. ஏ.சி. சண்முகம் உள்ளிட்ட தலைவர்களையும் திரு. பைஜெயந்த் பாண்டா சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளார்.

இந்த சந்திப்பின்போது பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரனும் உடனிருந்தார்.

<<<<<<<>>>>>>

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக, தமிழகத்தில் ஒரு சில பகுதிகளில் அடுத்த அடுத்த 24 மணிநேரத்தில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக் கண்ணன் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

<u>மாவட்டச் செய்திகள்</u>

வேலூர் மாவட்டம் குடியாத்தம் அருகே மோர்தானா அணை சுற்றுலா தளமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

-------------------

துத்துக்குடி மாவட்டம் கிள்ளிக்குளம் வ உ சிதம்பரனார் வேளாண்மை கல்லூரியில், மாவட்ட அளவிலான விவசாயிகள் பெருவிழா வேளாண்மை கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் மாவட்ட ஆட்சியர் திரு இளம்பகவத் தலைமையில் இன்று நடைபெற்றது.

------------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் விரிவான மருத்துவ காப்பீடு அட்டை, மகளிர் உரிமைத்தொகை விண்ணப்பத்திற்கான ஒப்புகை சீட்டு, சிறு-குறு விவசாயிகளுக்கான சான்றிதழ் ஆகியவற்றை மாவட்ட ஆட்சியர் திருமதி சிவ சௌந்தரவல்லி இன்று வழங்கினார்.

--------------------

திருவள்ளூர் மாவட்டம் சுப்பா ரெட்டிபாளையம் அரசு உயர்நிலைப்பள்ளியில் போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி செங்குன்றம் காவல் துணை ஆணையர் திரு பாலாஜி தலைமையில் நடைபெற்றது.

<<<<<<<>>>>>>

உலக ஜூனியர் கலப்பு குழு பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று இலங்கையை வென்றது.

குவஹாத்தியில் நடைபெறும் இப்போட்டியில் இந்தியா *2-0* என்ற ஆட்டக்கணக்கில் இலங்கையை தோற்கடித்தது.

--------------

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான *19* வயதுக்குட்பட்டோருக்கான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்டநேர இறுதியில், இந்தியா *7* விக்கெட் இழப்புக்கு *144* ரன் எடுத்துள்ளது.

*Mackay*-ல் நடைபெறும் இப்போட்டியில் ஆஸ்திரேலியா தனது முதல் இன்னிங்ஸில் *135* ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

*<<<<<<<END>>>>>>*